இரண்டாம் ஆண்டு (B)

# VBS ஆசிரியர் கையேடு

## முதல்குழு - விருப்ப நிலை

## UKG, I, II வகுப்புகள்

# விவிலியத்தில் விழாக்கள்

முதல் நாள்

## 1. பாஸ்கா விழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

### இறைவார்த்தை

விடுதலைப் பயணம் 12:1-11

### இறைச்செய்தி

- ❖ எகிப்து நாட்டில் அடிமைகளாய் துன்புறுத்தப்பட்ட இஸ்ரயேல் மக்கள்மேல் கடவுள் இரக்கம் கொண்டார்.
- ❖ கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை கொடுத்தார்.

### மனநிலை

- ✷ கடவுள்மீது நானும் நம்பிக்கை கொள்வேன்.
- ✷ கடவுள் எனது துன்பங்களில் இருந்து என்னை விடுவிப்பார்.

**1. தொடக்க இறைவேண்டல்**

***பாடல் :*** *தேர்ந்து கொள்க.*

அன்பின் இறைவா! இஸ்ரயேல் மக்கள்மீது இரக்கம் கொண்டு அவர்களை மீட்டது போல எங்களையும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் மீட்டுக் காப்பாற்றும். ஆமென்.



**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

அருள் நகர் என்னும் சிறிய கிராமம் குண்டாறு என்னும் ஆற்றின் கரையோரம் அமைந்திருந்தது. சில நாள்களாக அப்பகுதியில் மழை பெய்து கொண்டிருந்ததால் அந்த ஆற்றில் வெள்ளம் வரத் தொடங்கியது.

ஆற்றின் வெள்ளம் வீடுகளைச் சூழ்ந்தது; மக்கள் ஆற்று வெள்ளத்தில் சிக்கித் தவித்தனர் பலர் உயிருக்காகப் போராடினர். குழந்தைகள், ஆடுமாடுகள், உடைமைகள் அனைத்தும் தண்ணீரில் அகப்பட்டுக் கொண்டன. நள்ளிரவு நேரத்தில் திடீரென மீட்புக் குழுவினர் வந்து எச்சரிக்கை ஒலி எழுப்பி, ஆற்று வெள்ளத்தில் சிக்கிய அனைவரையும் மீட்டுப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர். உணவுப் பொட்டலங்கள், போர்வைகள் ஆகியவற்றைக் கொடுத்தனர். கிராம மக்கள் எல்லாரும் மீட்புக்குழுவினருக்கு நன்றி கூறினர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ❒ துன்பங்களில் இருந்து உங்களை யாராவது காப்பாற்றி உள்ளார்களா?
- ❒ மற்றவர்கள் துன்புற்றபோது நீங்கள் உதவியிருக்கிறீர்களா?
- ❒ கிராம மக்கள் மீட்புக்குழுவினருக்கு என்ன கூறினர்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

துன்புறுவோருக்கு உதவும் நல்ல எண்ணத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாய் துன்புறுத்தப்பட்ட போது கடவுள் மீட்டதை வாசித்துத் தெரிந்து கொள்வோம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

திருவிவிலியத்தை ஏந்தி அனைவரும் வரிசையாக வந்து, “வாழ்வு தருவது இறைவார்த்தை” என்ற பாடலைப் பாடி, விவிலிய அரங்கேற்றம் செய்யலாம். அப்போது மாணவர்கள் அனைவரும் மலர் தூவி விவிலியத்தைத் தொட்டு வணங்கலாம்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

விடுதலைப் பயணம் 12:1-11

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ✷ விவிலிய விழாக்கள் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் ஆழமான உறவை வெளிப்படுத்துகின்றன.

* பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்று பொருள்.
* பஞ்சம் பிழைக்க இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.
* அவர்கள் பல்கிப் பெருகி பெரிய இனமாக உருவாகினர்.
* எகிப்திய மன்னன் அவர்களை அடிமைகளாக நடத்தினான்.
* சுதந்திரமாய் வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாய் அவதிப்பட்டனர்.
* இஸ்ரயேல் மக்கள் கடவுளை மன்றாடினார்கள்.
* மோசே அவர் சகோதரர் ஆரோன் வழியாகக் கடவுள் பார்வோனிடம் பேசி மக்களை விடுதலை செய்யுமாறு கூறினார்.
* பார்வோன் மனம் மாறாததால் பத்துவிதமான கொள்ளை நோய்களை அனுப்பினார்.
* நிசான் மாதம் 14ஆம் நாள் ஒரு வயது நிரம்பிய ஆட்டைப் பலியிட்டு, அதன் இரத்தத்தைக் கதவு நிலைகளில் தடவச் சொன்னார்.
* நள்ளிரவில் கடவுளின் தூதர் எகிப்து நாடெங்கும் கதவு நிலைக் கால்களில் இரத்தம் தடவப்பட்ட இஸ்ரயேலர் வீடுகளைக் கடந்து சென்றார்.
* கதவு நிலைகளில் இரத்தம் தடவப்படாத வீடுகள் அனைத்திலும் தலைப்பேறுகள் கொல்லப்பட்டன.
* இஸ்ரயேலர் பாதுகாப்பாக எகிப்து நாட்டை விட்டு வெளியேறினர்.

**9. உய்த்துணரச் செய்தல்**

அனைத்தையும் படைத்து, காத்துவரும் இறைவனைப் புகழ்வோம். அனைத்துத் தீமைகளிலிருந்தும் விடுபட நாம் இறைவனிடம் மன்றாடுவோம்.



**இரண்டாம் நாள்**

# 2. கூடாரப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

லேவியர் 23:33-36

## இறைச்செய்தி

- பாலைநிலப் பயணத்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாய் கூடாரங்களில் வாழ்ந்தனர். விடுதலை அடைந்த இஸ்ரயேல் மக்கள் ஆண்டுதோறும் அதை நினைவுகூர வேண்டும்.
- இறைவன் காட்டிய பேரன்பை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் விதத்தில் ஏழு நாள்கள் கூடாரங்களில் வாழ்ந்து விழாவாகக் கொண்டாட வேண்டும்.

## மனநிலை

* இறைவன் என்றும் என்னைப் பாதுகாக்கின்றார்.
* இறைவனின் பேரன்பை மறக்க மாட்டேன்.
* இறைவனின் பாதுகாத்தலை மற்றவருக்கு எடுத்துக் கூறுவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

***பாடல் :*** *தேர்ந்து கொள்க.*

அன்புத்தந்தையே இறைவா! நாங்கள் இவ்வுலகக் கூடாரங்களின்மீது பற்றுக்கொள்ளாமல் நிலையான விண்ணகக் வீட்டில் நம்பிக்கை வைத்து தூய வாழ்வு வாழ அருள்தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

அன்பு நகர் என்னும் ஊரில் ஸ்டீபன் - ஸ்டெபி என்ற பெற்றோரும் ஸ்டெய்ன், ஸ்டெல்லா என்ற இரண்டு பிள்ளைகளும் அடங்கிய மகிழ்ச்சி, இறைபக்தி, நம்பிக்கை நிறைந்த குடும்பம் வசித்து வந்தது.

ஒருநாள் அக்குடும்பத்தினர் எல்லாரும் தொலைவில் உள்ள புனித அந்தோணியார் கோவில் திருவிழாவிற்குப் புறப்பட்டுச் சென்றனர். அங்கு ஏராளமாக மக்கள் வந்திருந்தனர். கோவிலைச் சுற்றியுள்ள இடங்களில் தங்குவதற்கு இடமில்லாமல் போகவே,

தாங்கள் கொண்டு வந்திருந்த தார்ப்பாய்களைக் கொண்டு ஊருக்கு வெளியே வயல் வெளிகளில் கூடாரம் அமைத்துத் தங்கினர். அங்கு உணவு சமைத்து உண்டு திருப்பலியில் பங்கு கொண்டு மகிழ்ந்தனர். இரண்டு நாள்கள் தங்கியிருந்தபின் மகிழ்வுடன் தங்கள் வீடு திரும்பினர். திருவிழாவிற்குச் சென்றது, திருப்பலியில் பங்கேற்றது, கூடாரம் அடித்துத் தங்கியது அக்குடும்பத்தினருக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. வீட்டிலும் புனித அந்தோணியார் சுரூபம் வைத்து, மன்றாடி அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்ந்தனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ★ ஸ்டீபன் ஸ்டெபியின் குடும்பம் எப்படிப்பட்டது?
- ★ திருவிழா சமயத்தில் அக்குடும்பத்தினர் எப்படித் தங்கியிருந்தனர்?
- ★ வீட்டிற்கு வந்து அவ்விழாவை எப்படி நினைவுகூர்ந்தனர்?
- ★ நீங்கள் குடும்பமாக எங்காவது போய் தங்கியிருந்துள்ளீர்களா?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

கடவுள் நம் உள்ளமாகிய கூடாரத்தில் தங்கவே விரும்புகிறார். நமது உடலும் மனமும் தூயதாக, கடவுள் வாழும் இல்லமாக மாறிட முயற்சி எடுப்போம்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

இறைவன் இஸ்ரயேல் மக்கள்மீது பேரன்பு கொண்டிருந்தார். அவர்களைப் பாதுகாத்தார், அவர்களோடு பயணித்தார். அவர்களோடு தங்கி வழிநடத்தினார் என்பதை வாசித்து, அறிந்து நம்பிக்கையுடன் வாழ்வோம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் “இயேசுவே உந்தன் வார்த்தையால்” என்ற பாடலைப் பாடுவார். அப்போது, மாணவர்கள் திருவிவிலியத்தை முத்தி செய்து மற்றவருக்குக் கொடுப்பர். எல்லா மாணவர் கையிலும் விவிலியம் சென்று வந்த பின் இறுதியாக அரியணையேற்றம் செய்து, வணங்கி அஞ்சலி செய்ய வேண்டும்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

லேவியர் 23:33-36

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ♦ கூடார விழா நாள்களில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.



- ♦ இறைவன் இஸ்ரயேல் மக்களிடம் பின்பற்றுமாறு சொன்ன மாபெரும் விழாக்கள் ஏழு, அந்தத் திருவிழாக்களில் கடைசி விழா இந்த கூடாரப் பெருவிழா.
- ♦ இஸ்ரயேலர்களின் ஏழாம் மாதமான திஸ்ரியின் பதினைந்தாவது நாளில் தொடங்கி, ஏழு நாள்கள் கூடார விழாக் கொண்டாடப்படும்.
- ♦ எட்டு நாள்களும் கடவுளுக்குத் தவறாமல் பலிசெலுத்த வேண்டும்.
- ♦ முதல் நாளும் இறுதி நாளும் ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும்.
- ♦ ஏழு நாள்களும் மக்கள் கூடாரங்களில் குடியிருக்க வேண்டும்.
- ♦ பாலை நிலத்தில் அலைந்து திரிந்த 40 வருடங்களும் இறைவன் அதிசயங்கள் புரிந்து அவர்களை வழிநடத்தினார்.
- ♦ இறைவன் செய்த அதிசயங்களை நினைவுகூரும் விதமாகக் கொண்டாடப்படுவதுதான் கூடாரப்பெருவிழா

**9. உய்த்துணரச் செய்தல்**

- ❒ என்னை அன்பு செய்யும் கடவுளை நானும் அன்பு செய்வேன்.
- ❒ கடவுள் செய்த நன்மைகளை நினைவுகூருவேன்.

மூன்றாம் நாள்

# 3. திருக்கோவில் அர்ப்பண விழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

2 குறிப்பேடு 7:6-10

## இறைச்செய்தி

- கோவில் இறைவன் வாழும் இல்லம்.
- நாம் கடவுள் தங்கி வாழும் தூய கோவில்.

## மனநிலை

- ✶ நான் கடவுள் வாழும் கோவில் என்பதை உணர்வேன்.
- ✶ என் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

***பாடல் :** தேர்ந்து கொள்க*

அன்பு மிக்க இறைவா, நாங்கள் நீர் தங்கி வாழும் இல்லம் என்பதை உணர்ந்து உமக்குகந்த பிள்ளைகளாக வாழ எங்களுக்கு உமது அருளைத் தாரும். ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

கிறிஸ்துராஜபுரம் என்ற ஊரில் பங்கு மக்கள் அனைவரும் இணைந்து இறைவனுக்கென்று ஒரு கோவில் கட்ட நினைத்தனர். பங்குத் தந்தையின் தலைமையில் நடந்த கூட்டத்தில் புதிதாகக் கட்டவிருக்கும் கோவிலின் திட்டத்தைப் பங்குத்தந்தை எடுத்துரைத்தார். அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இரண்டு ஆண்டுகளில் அழகான கோவிலைக் கட்டி முடித்தனர். கோவில் புனிதப்படுத்தும் விழாவில், அனைத்து மக்களும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி ஒற்றுமையுடன் கலந்து கொண்டனர். மறை மாவட்ட ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாத் திருப்பலியில் காணிக்கைகள், அன்பளிப்புக்கள், வழங்கி ஊர்மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ❖ உங்கள் ஊர் கோவில் விழாவில் நீங்கள் பார்ப்பவை எவை?
- ❖ புதிய கோவில் புனிதப்படுத்தப்படும் விழா எப்படி நடைபெற்றது?



### 4. வாழ்க்கை மதிப்பீடு

- ◆ இறைவனின் திட்டங்கள் மகத்தானவை.
- ◆ அடிக்கடி கோவிலுக்குச் செல்வது நல்லது.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

கோவில் அர்ப்பண விழா திருவிவிலியத்தில் உள்ள பழைய ஏற்பாட்டின் முக்கிய நிகழ்வாகும். இந்த விழாவின் சிறப்பை வெளிப்படுத்தும் இறைவார்த்தையை இப்போது வாசிக்கக் கேட்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

மூன்று மாணவர்களிடம் தீபம், தூபம், மலர் உள்ள தட்டுகளைக் கொடுக்க வேண்டும். வாசகமேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் திருவிவிலியத்தைச் சுற்றிலும் நின்று கொண்டு பாடக்கூடிய பாடலின் அடிப்படையில் இந்த மூன்று மாணவர்களும் அஞ்சலி எடுக்க வேண்டும்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

2 குறிப்பேடு 7:6-10

### 8. இறைவார்த்தை விளக்கம்

- ✹ திருக்கோவிலை அர்ப்பணம் செய்வது ஒரு சிறப்பு நிகழ்வு.
- ✹ குருக்கள் தமக்குரிய திருப்பணியை அர்ப்பணத்துடன் செய்து வந்தனர். ஆண்டவருக்கு நன்றி செலுத்தத் தாவீது உருவாக்கிய இசைக் கருவிகளை லேவியர் இசைத்தனர்.
- ✹ ஆண்டவர் நல்லவர்; அவரது பேரன்பு என்றென்றும் உள்ளது என்று லேவியர் புகழ்ந்தனர். அப்போது அவர்கள் முன்னிலையில் பணியாளர்கள் எக்காளம் ஊதினர்.
- ✹ ஆண்டவரது இல்லத்தின் முன்னிருந்த நடுமுற்றத்தைச் சாலமோன் அர்ப்பணம் செய்தார்.
- ✹ சாலமோன் இந்தத் திருவிழாவினை தொடர்ந்து ஏழுநாள் கொண்டாடினார்.
- ✹ பலிபீட அர்ப்பணத் திருவிழாவை ஏழு நாள்கள் அவர்கள் கொண்டாடி, எட்டாம் நாள் நிறைவு செய்தனர்.

### 9. உய்த்துணரச் செய்தல்

- ✹ கோவில் ஆண்டவரின் மாட்சி என்றும் தங்கியிருக்கும் இடமாகும்.
- ✹ பலிகள், காணிக்கைகளைவிட ஆண்டவர் நம்மையே விரும்பி ஏற்று ஆசியளிக்கின்றார்.

நான்காம் நாள்

# 4. கிறிஸ்து பிறப்பின் அறிவிப்புப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

லூக்கா 1:26-38

## இறைச்செய்தி

- விண்ணகத் தந்தையால் வாக்களிக்கப்பட்ட மீட்பர் இயேசு.
- அவரது தாயாக நாசரேத்து மரியா தேர்வு செய்யப்பட்டார்.
- கன்னிமரியா மீட்பரின் தாயாக, கடவுளால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

## மனநிலை

- இயேசு எனக்கும் மீட்பர்.
- கன்னி மரியாவைப் போல நானும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படிவேன்.
- கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

### 1. தொடக்க இறைவேண்டல்

***பாடல் :*** *தேர்ந்து கொள்க*

அன்புமிக்க இறைவா உம் திருமகனின் பிறப்பின் அறிவிப்புப் பெருவிழாவின் உண்மைகளைக் கற்றுக்கொள்ள இருக்கும் எங்களுக்கு உமது ஆசிகளை நிறைவாகப் பொழிந்தருளும். ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

லீமா சமூகவியலில் முதுகலைப் பட்டதாரி, ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான ஆஸ்திரியாவுக்குச் சென்று அங்குள்ள வியான்னா நகரில் ஒரு சிறப்புப் பயிற்சி பெற்றுவரத் திட்ட மிட்டிருந்தார். அப்பயிற்சி மிகச் சிறந்த ஊக்குநர் பயிற்சி. அந்தப் பயிற்சி பெற்றவர்கள் உலகெங்கும் மிகவும் புகழ்பெற்ற சமூக சேவையாளர்களாகத் திகழ்ந்தார்கள். இருபத்தேழு வயதாகியும் திருமணத்தை ஏற்காமல் இருந்தார் லீமா. அன்று பெற்றோர் வெளியூர் சென்றிருந்தனர். அவரது இளைய சகோதரர் ஒரு மாற்றுத் திறனாளி. அவர் மட்டும் வீட்டிலிருந்தார். திடீரென்று அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் அப்பகுதியின் பங்கு அருள்பணியாளரும்



வீட்டிற்கு வந்தனர். லீமாவிடம், “மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள மனித மேம்பாட்டு மையத்துக்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்க வேண்டும். அதற்கு நீங்கள் தகுதியான ஆள், செயல்பாட்டு நடைமுறைகளை நாங்கள் கற்றுத் தருகிறோம்” என்றனர். லீமாவுக்கு அச்சம், ஐயம் இருந்தாலும் பங்கு அருள்பணியாளர் கேட்டதால் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எதிர்ப்புகள் ஏராளமாய் இருந்தன. இருந்தாலும் இறையருளால் அந்த மையத்தை விரைவில் உலகத் தரம் வாய்ந்ததாக உயர்த்தினார். அதன் வழியாகப் பல அரும்செயல்கள் நிகழ்ந்தன. அனைவரும் பாராட்டினர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- லீமாவுக்கு வந்த அழைப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
- ஏதாவது நல்ல செயல் செய்ய உங்கள் விருப்பத்தை மாற்றிக் கொண்டதுண்டா?
- நற்செயல்களைச் செய்யும்போது கடவுள் துணை உண்டு என்பதை நம்புகிறீர்களா?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

1. தாம் முன்னேற, பிறரை முன்னேற்ற வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.
2. அவற்றை ஏற்பதும் மறுப்பதும் அவரவர் கைகளில் உள்ளன.
3. கடவுளின் திருவுளத்துக்கு ஏற்ப வாழ்வதே சிறந்தது.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

லீமா ஒரு திட்டத்தோடு இருந்ததைப் போலவே நாசரேத்து மரியாவும் யோசேப்பு என்பவரோடு திருமணத்தில் இணைய முன்தயாரிப்பு செய்யப்பட்டிருந்தவர். அவரை கடவுள் கபிரியேல் தூதர் வழியாக இயேசுவின் தாயாகி மீட்புப் பணிபுரிய அழைப்பதை வாசிக்கக் கேட்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

வானவர்போல் வேடமளித்த ஒருவர் நடுவில் திரு விவிலியத்தை தாழ்த்திப் பிடித்துக்கொண்டிருப்பார். மாணவர்கள் இருவர், இருவராக இணைந்து சென்று திருவிவிலியத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு, “ஆண்டவரே நாங்கள் உம் அடிமை; உம் சொற்படியே எமக்கு நிகழட்டும்” என்று சொல்லி வணங்கி வரலாம்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

லூக்கா 1:26-38

**8. இறைவார்த்தை விளக்கம்**

- நாசரேத்து மரியா யோசேப்பு என்பவருக்கு மண ஒப்பந்தம் ஆனவர்.
- மரியா இயேசுவின் தாயாவதற்கு கடவுளால் அழைக்கப்படுகிறார்.
- “எப்படி இது சாத்திமாகும்?” என மரியா அஞ்சி ஐயுறுகிறார்.
- தூய ஆவியாரின் செயல் இது என்று விளக்கம் அளிக்கப்படுகிறது.
- காலத்தின் தேவையைக் கருதி கடவுளின் இந்தச் சிக்கலான திருவுளத்துக்கு மரியா கீழ்ப்படிகிறார்.
- இப்பெருவிழா ஒரு நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கின் சிறப்புக் கொண்டாட்டம்.
- வழக்கமாக இப்பெருவிழா மார்ச் 25ஆம் தேதி கொண்டாடப்படும். இது புனித வாரத்தில் வருமாயின் உயிர்ப்புப் பெருவிழாவுக்குப் பின் ஒரு நாளில் கொண்டாடப்படும்.
- இதுவும் திருவிவிலிய விழாக்களுள் ஒன்றாகச் சிறப்பிடம் பெறுகிறது.

**9. உய்த்துணரச் செய்தல்**

கடவுளின் தூண்டுதலால் பெற்றோர், பெரியோர் வழியாக எனக்கு அளிக்கப்படும் சிறப்பு அழைப்பை நான் ஏற்று வாழ்வேன். எனது இறைதிருவுளச் செயல்பாடுகள் வெற்றிபெற அன்னை மரியா பரிந்துரைப்பார்.



ஐந்தாம் நாள்

# 5. இயேசுவின் பிறப்புப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

லூக்கா 2:8-14

## இறைச்செய்தி

- தம் ஒரே மகன் மனிதனாக இந்தப் பூமியில் பிறக்க கடவுள் திருவுளம் கொண்டார்.
- இயேசுவின் பிறப்பு, எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியாக அமைந்தது.
- இயேசுவின் பிறப்பு, விண்ணகத்தில் இறைவனுக்கு மாட்சியும் மண்ணகத்தில் இறைவனுக்கு உகந்தோர்க்கு அமைதியும் அளித்தது.

## மனநிலை

- ♦ இயேசுவின் பிறப்பால் நான் மகிழ்கின்றேன்.
- ♦ இயேசு என் உள்ளத்தில் பிறக்க நான் அவருக்கு இடமளிப்பேன்.
- ♦ இயேசுவின் பிறப்பு வெளிப்படுத்தும் எளிமையும் அமைதியும் என்னில் தொடரும்.

**1. தொடக்க இறைவேண்டல்**

***பாடல் :*** *தேர்ந்து கொள்க*

எங்களைத் தேடி வந்த இயேசுவே! ஒவ்வோர் ஆண்டும் உமது பிறப்பின் பெருமகிழ்வை நாங்கள் கொண்டாடி மகிழ்கின்றோம். உமது பிறப்பால் எங்கள் வாழ்வு வளமும் அமைதியும் அடைய அருள்தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

அருளப்பன், அமலா தம்பதியினருக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர்களுக்கு குழந்தைப் பேறு இல்லை. அவர்கள் இருவரும் குழந்தை இயேசுவிடம் அன்றாடம் மகப் பேற்றுக்காக மனதுருகிச் செபித்து வந்தனர். உங்களுக்கு எத்தனை

குழந்தைகள் என்று யாராவது கேட்டால், எங்களுக்கு இதுவரை குழந்தைகள் இல்லை, ஆனால் கடவுள் நிச்சயம் எங்களுக்கு மகப்பேறளிப்பார் என்று ஆழமான நம்பிக்கையுடன் கூறி வந்தனர். அருளப்பன், அமலா தம்பதியினரது நம்பிக்கையின் படியே ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை இயேசு தங்களைக் கைவிடவில்லை என்பதை எல்லா மக்களும் அறியும் வண்ணம் கூறி, மகிழ்வோடும், மனநிறைவோடும் இறைவனுக்குச் சாட்சியாய் வாழ்ந்து வந்தார்கள்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- அருளப்பன், அமலா தம்பதியினர் எதற்காக, யாரிடம் மனதுருகிச் செபித்து வந்தனர்?
- உங்கள் வீட்டில் குழந்தை பிறந்தபோது எல்லாரும் எப்படி காணப்பட்டனர்?
- கடவுளிடம் நம்பிக்கையுடன் மன்றாடி நன்மை பெற்றுக் கொண்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? பகிர்ந்து கொள்ளுங்கள்.

**4. வாழ்க்கை மதிப்பீடு**

- ஒரு குடும்பத்தில் குழந்தைப் பேறு என்பது ஆண்டவர் அளிக்கும் மாபெரும் கொடையாகும்.
- குழந்தையின் வாழ்வு, வளர்ச்சி பற்றி பெற்றோர் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்.
- கணவன் மனைவியின் ஆழமான அன்பின் அடையாளங்களே குழந்தைகள்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

இயேசுவின் பிறப்பு இந்த உலகிற்கே மாபெரும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. அந்த மகிழ்வால் உலகமே மீட்படைந்தது என்பதை இன்றைய இறைவார்த்தையின் வழியாக அறிந்து கொள்வோம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

மாணவ, மாணவியர் அனைவரும் தனித்தனியாகத் தங்கள் கைகளில் தங்களுக்கு பிடித்த பூக்களை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒலி நாடாவில் விவிலிய அஞ்சலிப் பாடல் இசைக்க, அந்த இசைக்கு ஏற்றவாறு மாணவர்கள் நடனமாடி இறை வார்த்தைக்கு அஞ்சலி செலுத்த வேண்டும். பின் மாணவ மாணவியர் விவிலிய வாசக மேடையினைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டு



“வார்த்தையான இறைவா எங்களோடு தங்கும்” என்று சத்தமாகச் சொல்லி தலைவணங்க வேண்டும்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

லூக்கா 2:8-14

**8. இறைவார்த்தை விளக்கம்**

- பெத்லகேம் ஊரில் இயேசு பிறந்தார்.
- அகுஸ்து சீசரின் கட்டளைப்படி மக்கள் தொகைக் கணக்கில் தன் குடும்பத்தைப் பதிவு செய்ய தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், அவருக்கு மண ஒப்பந்தமான மரியாவும் நாசரேத்து ஊரிலிருந்து பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றனர்.
- பெத்லகேமில் இருந்த பொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது.
- மரியா தம் தலைமகனைப் பெற்றெடுத்து பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டில் கிடத்தினார்.
- வயல்வெளியில் தங்கள் கிடைக்குக் காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்களுக்கு வானதூதர் தோன்றி, “இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்” எனக்கூறினார்.
- இடையர்கள் இயேசு பிறந்த இடத்திற்கு சென்று, மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தி இருந்த குழந்தையையும் கண்டு வணங்கினர்.
- இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பெருவிழாவாக இன்றும் கொண்டாடப்படுகிறது.
- உலக வரலாற்றையே கி.மு., கி.பி. என இரண்டாகப் பிரித்த வரலாற்று நாயகர் இயேசு கிறிஸ்து.
- இயேசுவின் பிறப்பு உலக மக்கள் அனைவருக்குமே மனமகிழ்வைத் தந்தது; அவர் வழியில் நடக்க நாமும் முயற்சி எடுக்க வேண்டும்.
- பெத்லகேமில் பிறந்த குழந்தை இயேசுதான் உலக மீட்பர் என்று நம்ப வேண்டும்.

**9. உய்த்துணரச் செய்தல்**

இயேசுவின் பிறப்பு உலக மக்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டியதைப் போன்று, நமது வாழ்வு எல்லாருக்கும் மகிழ்ச்சியூட்டும் விதத்தில் அமைய வேண்டும்.

ஆறாம் நாள்

# 6. திருக்காட்சிப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

மத்தேயு 2:1-11

## இறைச்செய்தி

- மூன்று ஞானிகள் இயேசுவைக் காண, வணங்க வந்த நிகழ்வு திருக்காட்சிப் பெருவிழா எனப்படுகிறது.
- இயேசு அனைத்து உலகுக்கும் உரியவர் என்பதை இவ்விழா உணர்த்துகிறது.
- நமக்காகப் பிறந்துள்ள இயேசுவை நாம் கண்டு, ஏற்று பிறருக்கும் அறிவிக்க வேண்டும்.

## மனநிலை

- ஞானிகளைப் போல நானும் இயேசுவை ஆவலுடன் தேடுவேன்.
- இயேசுவை வணங்கி, அவருக்கு என்னையே காணிக்கையாக்குவேன்.
- இயேசுவை என் வாழ்வினால் அனைவருக்கும் அறிவிப்பேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

***பாடல் :*** *தேர்ந்து கொள்க*

அன்பு மிக்க இயேசுவே! ஞானிகள் உம்மைக் கண்டு, வணங்கக் கீழ்த்திசையிலிருந்து வருகை தந்தனர். நாங்களும் எங்கள் ஆன்மிகப் பயணத்தில் அன்றாடம் உம்மைக் கண்டுணர்ந்து வாழ அருள்தாரும். ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

தென்பொதிகை மலை ஓரம் கருணை ஆற்றின் கரையில் கருத்தப் பிள்ளையூர் என்ற அழகான கிராமம் ஒன்று இருக்கிறது. அந்தக் கிராமத்தில் அதிகமான வயல்வெளிகள், மலைகள், குன்றுகள், தோட்டங்கள், அணை, ஆறு, கால்வாய் என்று இயற்கை அன்னையின் கொடைகள் கொட்டிக்கிடக்கின்றன. அந்த ஊரின் இயற்கை வளங்களைப் பார்க்கவே வெளியூரில்



இருந்து மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர். இவ்வளவு அழகான அந்த ஊரில் மூன்று கண்களுடன் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இந்த இரட்டைக் குழந்தைகளை அதிசயத்துடன் மக்கள் பார்த்தனர். பரிசுகள் வழங்கினர். அக்குழந்தைகள் எல்லா இனமக்களுக்கும் இறைவனது ஆற்றலை வெளிப்படுத்தின.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ★ கருத்தப் பிள்ளையூரில் நடந்தது என்ன?
- ★ அக்குழந்தைகளைக் காணவந்தோர் என்ன செய்தனர்?
- ★ மூன்று கண்களுடன் பிறந்த குழந்தைகள் எல்லாருக்கும் எதை வெளிப்படுத்தின?
- ★ இதைப் போன்று விந்தை நிகழ்வை நீ கண்டதுண்டா? அல்லது கேட்டதுண்டா?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

- இயேசு கிறிஸ்துவைக் காண ஏங்கிய ஞானிகளுக்கு விண்மீன் வழிகாட்டியதுபோல உண்மையைத் தேடும் எல்லாருக்கும் வியப்பான வழிகாட்டல் கிடைக்கும்.
- எல்லாரிலும் இயேசுவைக் காண முயல வேண்டும்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

கிழக்கு நாடுகளில் வாழ்ந்த ஞானிகளுக்கு இயேசுவின் பிறப்புச் செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் கைகளில் ஆவலோடு காணிக்கைகள் கொண்டு வந்து இயேசுவை வணங்கினர். இந்த நிகழ்வை விளக்கும் இறைவார்த்தைக்குச் செவிமடுப்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

மாணவ, மாணவியர் அனைவரும் வட்டமாக நிற்பர். நடுவில் விவிலியத்தை அரியணை ஏற்றி வைக்க வேண்டும். மாணவ, மாணவியர் உதரிப்பூக்களால், திரு விவிலியத்திற்கு அஞ்சலி செய்வர். பாடல் பாடிய படியே ஒருவர் பின் ஒருவராகச் சென்று திருவிவிலியத்தைத் தொட்டுத் தலை தாழ்ந்து வணங்குவர். பின்பு “ஆண்டவரே பேசும்; உம் அடியான் கேட்கின்றேன்” என்று உரத்த குரலில் அனைவரும் சேர்ந்து சொல்ல வேண்டும்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

மத்தேயு 2:1-11

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ❖ திருக்காட்சி என்பது கிரேக்க மொழியில் ‘கடவுள் தோன்றுவது’ ‘கடவுளைக் காண்பது’ என்று பொருள்படும்.
- ❖ இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல. மாறாக பிறவினத் தாருக்கும் சொந்தமானவர் என்பதையே இவ்விழா குறித்துக் காட்டுகிறது.
- ❖ ஞானிகள் இயற்கையைக் கணித்து விளக்கம் தரும் கலையில் கைதேர்ந்தவர்கள்.
- ❖ அவர்கள் கிழக்கிலிருந்து குழந்தை இயேசுவைக் காண வந்து பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகிய காணிக்கைகளுடன் வணங்கினர்.
- ❖ இது முற்காலத்தில் மூவரசர்கள் விழா என அழைக்கப்பட்டது.
- ❖ ஞானிகளின் பெயர்கள் கஸ்பார், மெல்கியோர், பல்தசார் என மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன.
- ❖ ஞானிகள் கொண்டு வந்த பொன் இயேசுவின் அரசத் தன்மையையும், சாம்பிராணி குருத்துவ நிலையையும் வெள்ளைப் போளம் அவருடைய மனிதநிலை இறப்பையும் குறிக்கின்றன.
- ❖ பிறந்திருப்பவர் யூதர்களுக்கு அரசர் எனக் கேட்டுக் கலங்கிய அரசரான ஏரோதிடம் மீண்டும் செல்ல வேண்டாம் என்று கனவில் எச்சரிக்கப்பட்டு, ஞானிகள் வேறு வழியாகத் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.
- ❖ தனக்கு மாற்றாக எந்த அரசனும் உருவாகக் கூடாது என்பதற்காகவே ஏரோது இரு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொல்லச் செய்தான்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ✶ இயேசுவை நமது செயல்களால் அன்றாடம் சந்திக்கும் நல்ல பண்பினை நாம் வழக்கமாகக் கொள்ள வேண்டும்.
- ✶ இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.
- ✶ இயேசு எல்லாருக்குமானவர் என்ற எண்ணத்தில் நாம் வாழ வேண்டும்.



**ஏழாம் நாள்**

# 7. ஆண்டவரின் திருவிருந்துப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

மாற்கு 14:22-26

## இறைச்செய்தி

- ✷ இயேசு, தம் உடலை நமக்கு உணவாகத் தருகின்றார்.
- ✷ தம் இரத்தத்தைப் பானமாக தருகின்றார்.
- ✷ கடவுளைப் போற்றவும், நன்றி கூறவும் கற்றுத்தருகிறார்.

## மனநிலை

- ✹ என்னிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து வாழுவேன்.
- ✹ இயேசுவின்மீது அன்பு கொள்வேன்.
- ✹ இயேசு எப்போதும் என்னோடு இருக்கிறார் என நம்புவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

***பாடல் :*** *தேர்ந்து கொள்க*

வாழ்வு தரும் உணவு நானே என்று சொன்ன அன்பு இயேசுவே! வாழ்வின் உணவாகிய உம்மை ஏற்றுக்கொண்டு அன்பு செய்து வாழ வரம் தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

மணக்கரை என்ற ஊரில் மரியதாஸ் என்னும் ஓர் இளைஞர் வாழ்ந்து வந்தார். அவரது வகுப்புத் தோழி மெர்சி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் வேலை தேடிச் செல்கையில் ஒரு விபத்தில் தன் பார்வையை இழந்தார். மரியதாஸ் இதைக் கேள்விபட்டு எப்படியாவது மெர்சிக்கு உதவி செய்ய வேண்டும் என நினைத்தார். பலரிடம் ஆலோசனை பெற்றார். மருத்துவச் செலவுக்குப் பெருந்தொகை தேவைப்பட்டது. அந்நேரம் அவ்வூரின் பணக்காரர் ஒருவர் மருத்துவ மனையில் கிட்னி நோயினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப் பட்டிருந்தார். மருத்துவரிடம் கலந்து பேசி, அவருக்குத் தேவைப்படும் தன் கிட்னியைக் கொடுக்க மரியதாஸ் முன்வந்தார். பணக்காரர் பிழைத்துக் கொண்டார். அதற்கு ஈடாக அந்தக் குடும்பத்தார் மெர்சியின் அறுவைச் சிகிச்சைக்குரிய செலவுத் தொகையைக் கொடுத்தார்கள். மெர்சி அறுவை சிகிச்சைக்குப்பின் பார்வை அடைந்தார். மரியதாஸ்க்கும் கடவுளுக்கும் மெர்சி நன்றி கூறினார்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ◆ மெர்சிக்கு உதவ மரியதாஸ் செய்தது என்ன?
- ◆ பார்வைப் பெற்ற மெர்சி யாருக்கெல்லாம் நன்றி கூறினாள்?
- ◆ பார்வையற்றவர்களுக்கு உதவிய அனுபவம் உனக்கு உண்டா?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

- ❦ ஆண்டவர் தன்னையே விருந்தாகத் தருகிறார்.
- ❦ பிறரின் துன்பத்தில் நாம் உதவ வேண்டும்.
- ❦ நமக்கு உதவும் கடவுளுக்கும் மனிதருக்கும் நாம் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

இயேசு தன்னையே தம் சீடர்களுக்கு உடலாகவும், இரத்தமாகவும் கொடுத்து திருவிருந்து கொண்டாடியது பற்றிய இறைவாக்கை வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

எரியும் திரியை ஏந்தி திருவிவிலியத்தைச் சுற்றிலும் நின்றுகொண்டு, 'வார்த்தையான இயேசுவே, வாழ்வு தாருமே' என்று மும்முறை கூறி அஞ்சலி செய்தல்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

மாற்கு 14:22-26

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ★ இயேசு தம் இறப்பிற்கு முன் தம்மையே திருவிருந்தாகத் தந்தார்.
- ★ இதுவே இயேசுவின் இறுதி இரவு உணவு நிகழ்வாகும்.
- ★ அப்பத்தை உடலாகவும், இரத்தத்தைத் தன் குருதியாகவும் இயேசு கொடுக்கின்றார்.
- ★ புதிய உடன்படிக்கையின் கொண்டாட்டம் இந்தத் திருவிருந்தாகும்.
- ★ இதுவே நற்கருணை அருளடையாளம்.
- ★ இதன் வழியாக இயேசு நம்மில் வாழ்கிறார்.
- ★ இத்திருவிருந்தில் நாம் அடிக்கடி பங்குபெற வேண்டும்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ❣ ஆண்டவர் தரும் விருந்தில் பங்குபெறும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்.
- ❣ இயேசுவைப் போல் நானும் பகிர்ந்து வாழ்வேன்.
- ❣ என்னால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்வேன்.



எட்டாம் நாள்

# 8. இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

மாற்கு 16:1-7

## இறைச்செய்தி

- ✸ இயேசு தாம் முன்னுரைத்தபடியே இறந்த மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்.
- ✸ இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் மையம்.
- ✸ இயேசுவின் உயிர்ப்பு ஐயத்தைக்களைந்து, அச்சத்தைப் போக்கும் அரும் நிகழ்வு.

## மனநிலை

- ✹ கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை.
- ✹ இயேசுவின் உயிர்ப்பின்மீது நான் நம்பிக்கை கொள்வேன்.
- ✹ கிறிஸ்துவின் உயிர்ப்பை எல்லாருக்கும் அறிவிப்பேன்.
- ✹ நானும் ஒருநாள் உயிர்ப்பேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

***பாடல் :*** *தேர்ந்து கொள்க.*

உயிர்த்த இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம். உம் தம்பி, தங்கைகளாகிய நாங்கள் உம்மேல் நம்பிக்கைக் கொண்டு, உயிர்ப்பின் மகிழ்வில் வாழ அருள்தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

சில்வியா என்ற சிறுமி இரண்டாம் வகுப்பு படித்து வந்தாள். அவள் எல்லாரிடமும் அன்புடன் பழகுவாள். தன்னால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்வாள். அவளுடன் படித்த அனைவரும் அவளை மிகவும் அன்பு செய்தனர். ஒருநாள் அவள் உடல் நலமின்றி அவதியுற்றாள். அவளது பெற்றோர் சிகிச்சை அளித்தனர். அவர் முழுக்குணம் அடையவில்லை. உடன்பயிலும் மாணவர்கள், கேள்விப்பட்டு சில்வியாவிற்காகத் தொடர்ந்து கண்ணீருடன் வேண்டினர். பெரிய மருத்துவர் பரிசோதித்து சிகிச்சை வழங்கினார். இதனால் அவள் குணம் பெற்று இல்லம் திரும்பினாள். எல்லாரும் மகிழ்ச்சியடைந்து கொண்டாடினர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ♦ சில்வியாவை ஏன் எல்லாரும் அன்பு செய்தனர்?
- ♦ சில்வியாவிற்கு என்ன நிகழ்ந்தது?
- ♦ சில்வியா நலம்பெற மாணவர்கள் செய்தது என்ன?
- ♦ நீ மகிழ்ச்சியடையும்படி யாரேனும் குணம் பெற்றுள்ளனரா?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

- ★ மருந்து கொடுப்பவர் மருத்துவர்; குணம் தருபவர் இறைவன்.
- ★ இறை நம்பிக்கையினால் வாழ்வு மலரும்.
- ★ துன்புறும் ஒருவர் அதிலிருந்து விடுபட மற்றவர் உதவ வேண்டும்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

சிலுவையில் அறையப்பட்டு இறந்த இயேசு தாம் கூறியபடியே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்ட நிகழ்வை வாசிக்கக் கேட்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

திருவிவிலியத்தை ஆசிரியர் ஒவ்வொருவரிடமும் கொண்டு செல்ல மாணவர்கள் இரு கைகளால் அதைத்தொட்டு "உயிர்த்த இயேசுவே எம் வாழ்வை ஒளிரச் செய்யும்" என்று சொல்லித்தம் கண்களில் ஒற்றிக்கொள்வர்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

மாற்கு 16:1-7

### 8. இறைவார்த்தை விளக்கம்

- ❖ இயேசு கல்வாரி மலையில் சிலுவையில் அறையப்பட்டு, துன்புற்று, இறந்தார்.
- ❖ இயேசு தம் உயிர்ப்புப் பற்றி சீடர்களிடம் முன்னறிவித்திருந்தார்.
- ❖ அதன் படியே இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
- ❖ இயேசு தம் உயிர்ப்பின் வழியாக நமக்குப் புதுவாழ்வு தருகிறார்.
- ❖ நாமும் அவரைப்போல ஒருநாள் உயிர்ப்போம்.
- ❖ அவரது உயிர்ப்பை எல்லாருக்கும் அறிவிக்க வேண்டும்.

### 9. உய்த்துணரச் செய்தல்

- ❖ இயேசுவே உயிர்த்தெழுதலும் வாழ்வும் ஆனவர்.
- ❖ இயேசு வல்லமை நிறைந்தவர்.
- ❖ இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு வாழ்வேன்.



## ஒன்பதாம் நாள் 9. பெந்தகோஸ்துப் பெருவிழா

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

### இறைவார்த்தை

திருத்தூதர் பணிகள் 2:1-4

### இறைச்செய்தி

- ✹ கிறிஸ்து உயிர்த்த 50ஆம் நாள் பெந்தக்கோஸ்துப் பெருவிழா கொண்டாடப்படுகிறது.
- ✹ இறைவனின் கொடையான தூய ஆவியார் ஆற்றலுடன் பொழியப்பட்ட பெருவிழா
- ✹ பழைய ஏற்பாட்டின் அறுவடை விழாவை இவ்விழா நினைவு கூர்கிறது.

### மனநிலை

- ✷ தூய ஆவியாரின் உன்னதக் கொடையைப் பெற நான் விரும்புவேன்.
- ✷ அவரது ஆற்றல் மற்றும் வரங்களுக்காக மன்றாடுவேன்.
- ✷ இயேசுவை அறிந்து, அவருக்குச் சாட்சியாக வாழ்வேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

***பாடல் :*** *தேர்ந்து கொள்க*

வல்லமை நிறைந்த இறைவா, துணையாளராம் தூய ஆவியை எங்களுக்கு நிறைவாகத் தந்து அவரது வழிகாட்டுதலில் நடந்து, உமக்குச் சான்று வாழ்வு வாழ வரம் அருளும். ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

நிர்மலா எட்டாம் வகுப்பு மாணவி. அவளுடைய பங்கில் பல அமைப்புகள் இருந்தன அனைத்தும் உயிரோட்டமாய் செயல்பட்டு வந்தன. நிர்மலாவுக்கும் அவற்றில் ஏதாவது ஒன்றில் இணைந்து பணி செய்ய வேண்டும் என்னும் ஆசை இருந்தது. ஆனால் அவளுக்கு மிகுந்த பயமும் கூச்சமும் இருந்ததால் அதுபற்றி யாரிடமும் எதுவும் சொல்லியதே இல்லை. அந்த ஆண்டு ஆயர் அவர்கள் அவளது பங்கிற்கு வந்து உறுதிப்பூசுதல் வழங்கும் பொழுது நிர்மலாவும் அதனைப் பெற்றாள். அன்றைய மறையுரையில் ஆயர், தூய ஆவியாரின் கனிகள், வரங்கள்,

கொடைகள் பற்றியும் பொது நன்மைக்காக தூய ஆவியின் வல்லமையோடு செயல்படவேண்டும் என்றும் போதித்தார். உறுதிப்பூசுதல் பெற்ற மறுநாளே நிர்மலா பங்கிலிருந்த புனித சிறுமலர் மன்றத்தில் இணைந்து, சிறப்புடன் பணி செய்யத் தொடங்கினாள். அவளது பணிகள் பாராட்டுக்குரியவையாய் இருந்தன.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ♦ நிர்மலாவுக்கு இருந்த ஆசை என்ன?
- ♦ ஆயர் மறையுரையில் கூறியது என்ன?
- ♦ நிர்மலாவின் பணிகள் பாராட்டப்படக் காரணம் என்ன?
- ♦ நீ பணி செய்ய தூய ஆவியார் எவ்வாறு துணை நிற்கிறார்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

திருமுழுக்கில் நான் பெற்ற தூய ஆவியாரின் கொடைகளை சமூக நலனுக்காகப் பயன்படுத்துவது எனது கடமை.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

பெந்தக்கோஸ்துப் பெருவிழாவில், தூய ஆவியாரின் வருகையையும், அதனால் சீடர்களிடம் ஏற்பட்ட மாற்றத்தையும் குறித்து இப்போது வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

திருவிவிலியத்தை நடுவில் வைத்து ஒளி, தூபம், மலர்களைக் கொண்டு அஞ்சலி செய்து, ஆண்டவரே எனக்கு உம் ஆவியாரைத் தாரும்; என்னோடு வந்து தங்கும் என்று சொல்லி இறைவார்த்தைக்கு மரியாதை செய்யலாம்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

திருத்தூதர் பணிகள் 2:1-4

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ◆ பழைய ஏற்பாட்டில் அறுவடை முடிந்த 50ஆம் நாள் ஆண்டவருக்குப் புதுஉணவுப் படையலைச் செலுத்தி அவரை வழிபட்டனர். அது அவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வாக இருந்தது.
- ◆ புதிய ஏற்பாட்டில், கிறிஸ்து உயிர்த்த 50ஆம் நாள் தூய ஆவியார் ஆற்றலுடன் வந்ததை நினைவுகூர்ந்து பெந்தக்கோஸ்துப் பெருவிழா கொண்டாடப்படுகிறது.



- ◆ தூய ஆவியார் மூவொரு கடவுளின் மூன்றாம் ஆள்.
- ◆ பெந்தக்கோஸ்து நாளில் சீடர்கள் ஒவ்வொருவர் மீதும் தூய ஆவியார் பொழியப்பட்டார்.
- ◆ அது சீடர்களின் உள்ளத்தைத் திடப்படுத்தி அச்சத்தை விலக்கித் துணிவைத் தருவதாக அமைந்திருந்தது.
- ◆ நாம் திருமுழுக்கிலும் சிறப்பாக உறுதிப்பூசுதல் அருளடையாளத்திலும் தூய ஆவியாரைப் பெற்றுக் கொள்கிறோம்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ★ சோர்விலும், பயத்திலும், பதட்டத்திலும் இருக்கும்போது தூய ஆவியாரின் துணையைக் கேட்பேன்.
- ★ தூய ஆவியாரின் கொடைகளைப் பொதுநன்மைக்காகவும் இயேசுவைப் பற்றி அறிவிக்கவும் பயன்படுத்துவேன்.

## VBS ஆசிரியர்கள் கவனத்திற்கு

✵ குழந்தைகளின் வயது, மனநிலைக்கு ஏற்ப

1. முதல் குழு - விருப்ப நிலை (UKG, I, II வகுப்புகள்)
2. இரண்டாம் குழு - தொடக்க நிலை (III, IV, V வகுப்புகள்)
3. மூன்றாம் குழு - இளநிலை (VI, VII, VIII வகுப்புகள்)
4. நான்காம் குழு - முதுநிலை (IX, X, XI வகுப்புகள்)

என்று தனித்தனியாக ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் உண்டு. மேலும், வருகைப் பதிவு படம், பாடல் ஏடு, பேட்ஜ், தொடர் கதை நூல், ஒலிக்குறுந்தகடு (CD), திரைப்பட DVD, நாடக நூல் ஆகிய துணைக்கருவிகளும் உண்டு.

✵ பரிந்துரைக்கப்படும் மாதிரிக் கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 09-00 | - | ஆசிரியர்கள் கூடிச் செபித்தல் |
| 09-15 | - | பொதுவான பாடல்பயிற்சி |
| 09-45 | - | மாணவர்கள் கூடிச் செபித்தல் |
| 10-00 | - | குழுப் பாடவேளை - I - *(அந்த நாளுக்குரிய இறைவார்த்தைப் பாடத்தைத் தகுந்த தயாரிப்புடன் துணைக்கருவிகளுடன் குழுக்களில் ஆசிரியர் நடத்துகிறார்)* |
| 10-45 | - | இடைவேளை - சிற்றுண்டி வழங்குதல் |
| 11-00 | - | குழுப் பாடவேளை - II - *(குழுக்களில் விடை எழுதுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், வருகைப் பதிவு படம் ஒட்டுதல், வர்ணம் தீட்டுதல்)* |
| 11-45 | - | பொதுவான விளையாட்டு |
| 12-00 | - | பொதுவான பாடல்பயிற்சி |
| 12-15 | - | பொதுவான தொடர்கதை |
| 12-30 | - | நிறைவு செபம், திறனாய்வு, திட்டமிடல். |

✵ **ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் திருவிவிலியம் கொணர்தல் வேண்டும்.**

© *தயாரிப்பு:* **அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ், செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு.**
*வெளியீடு:* **இயக்குநர், தமிழக முப்பணி நடுநிலையம், திண்டிவனம் - 604 001**

விடுமுறை

இரண்டாம் ஆண்டு – B

விவிலியப் பள்ளி

# VBS

# ஆசிரியர் கையேடு

**முதல் குழு – விருப்பநிலை (UKG, I, II வகுப்புகள்)**

## விவிலியத்தில் விழாக்கள்

